# திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு A

**இன்றைய வாசகங்கள்:**

எசாயா ஆகமத்திலிருந்து வாசகம் 7:10-14,

திருப்பாடல்24:1-6,

திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 1:1-7,
புனித மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம். 1:18-24

## திருப்பலி முன்னுரை:

மண்ணுலகும் அதில் நிறைந்துள்ள அனைத்தும் ஆண்டவருடையவை: நிலவுலகும் அதில் வாழ்வனவும் அவருக்கே சொந்தம்.

கிறிஸ்து பிறப்புக்காக ஆயத்தமாகும் அன்பு உடன்பிறப்புக்களே! உங்கள் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்தைக்கூறி மகிழ்ந்து நிற்கிறேன். திருவருகைக்காலத்தின் இறுதி வாரத்தை எட்டியுள்ளோம். இறைத்திருவுளம் ஏற்றதனால் மாண்புற்ற கன்னி மரி, பெற்ற பெறர்க்கரிய பேறு, நம்பி இறைத்திருவுளம் ஏற்கும் அனைவருக்கும் எடுத்துக்காட்டாக நம் முன் இன்று வைக்கப்படுகிறது. உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துங்கள். ஏனெனில் ஆண்டவரின் வருகை நெருங்கி வந்து விட்டது என்னும் மிக மிக முக்கியமான செய்தியினை இன்றைய இறைவார்த்தைகள் வழியாக இறைவன் வெளிப்படுத்துகின்றார். அத்தோடு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீது நம்பிக்கை கொண்டு இவருக்குக் கீழ்ப்படியுமாறு இவர் பெயர் விளங்க இவர் வழியாகவே நாம் பல்வேறு பணிகள் செய்வதற்குரிய பல்வேறு வகையான அருட்கொடைகளையும், ஆற்றல்களையும் பெற்றுக்கொண்டோம் என்னும் உண்மையையும் இறைவார்த்தைகள் உணர்த்தி நிற்கின்றன. எனவே, கடவுளின் அன்பைப் பெற்று இறைமக்களாக அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், இறைவனுடைய திருவுளத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு, இறைவனின் பொறுமைக்கெதிராகச் செயற்படாது, மனமாற்றம் பெற்று புதிய சமுதாயமாக வாழ வரம் கேட்டுத் தொடரும் திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**என் இதய தெய்வமே! அமைதியின் இறைவா!**

உமது வருகையை எதிர்நோக்கியுள்ள உம் திருஅவையில் நீர் தரும் அமைதியைத் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள்,அருட்பணியாளர்கள் மற்றும் பொதுநிலையினர் பெற்று மகிழவும், அந்த அமைதியை இவ் உலகம் பெற்றிட அனைவரும் இணைந்துச் செயல்பட உமது உடனிருப்பையும், சேவை மனப்பான்மையையும் நல்கிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நேர்மையின் சிகரமே எம் இறைவா!**

எம் குடும்பங்களில் அனைவரும் “யோசேப்பு போல் நேர்மையாளராய், வெளியே இருந்து கொடுக்கப்பட்ட சட்டத்தையும் தாண்டிய மனச்சான்றின் சட்டத்தையும், சக மனிதரின் மாண்பையும் உயர்வாக நினைக்கின்ற நல்ல இதயத்தையும், சுயநலமற்று உறவுகளைப் போற்றிட, வளர்த்திட வேண்டிய நல்வரங்களைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள்: தள்ளாடும் முழங்கால்களை உறுதிப்படுத்துங்கள். உள்ளத்தில் உறுதியற்றவர்களை நோக்கி, திடன் கொள்ளுங்கள், அஞ்சாதிருங்கள்: என்ற தந்தையே!**

எம் இளைஞர்களை ஆன்மீகத்திலும், அருள்வாழ்விலும் உறுதிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**மாட்சிமிகு மன்னரே இறைவா!**

நாங்கள் ஒவ்வொருவரும் கறைபடாத கைகளும், மாசற்ற மனமும் உடையவர்களாய்: பொய்த் தெய்வங்களான பகைமை, பிரிவினை, தீமை போன்றவற்றை நோக்கித் எம் உள்ளத்தை திருப்பாதும், உமது பொறுமையைச் சோதிக்காதும் உம்மீது விசுவாசம் கொண்டு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஒளியான எம் இறைவா!**

இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்வில் உம்மை அறியாமல் வாழ்ந்தக் காலங்களில் தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப, இவ்வுலகச் சிற்றின்பங்களைப் பெரிதாகக் கருதி அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை இழந்த நிலையில் தங்களைத் தேற்றுவதற்கு யாரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நீர் உமது உடனிருப்பை நிறைவாகப் பொழிந்து உமது ஆவியின் அருளை நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**மகிழ்ச்சியின் மன்னராம் இறைவா,**

வாழ்வின் குறிக்கோளை அறிந்துகொள்ளாமல் இவ்வுலகின் செயற்கைச் சூழலில் சிக்கி, தவறான இலக்கை நோக்கிய பாதையில் பயணம் செய்து கொண்டிருப்போர் மனந்திரும்ப உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**புனிதர்களின் பேரின்பமாகிய எம் இறைவா!**

எங்கள் அருகிலுள்ள ஏழைகள், துயருறுவோர், தனிமையில் விடப்பட்டோர், நோயாளிகள், அனைவருக்கும் இறைவனின் அன்பையும் பரிவையும் அளிக்கும் அன்புக் கருவியாக எம் இளைய சமுதாயம் மாறிவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.